©
தமிழ்நாடு அரசு
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 0.80 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 43] சென்னை, புதன்கிழமை, நவம்பர் 16, 2011
ஐப்பசி 30, திருவள்ளுவர் ஆண்டு–2042

## பகுதி IV— பிரிவு 2 இன் இணைப்பு

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2011–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 26–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:–**

**சட்ட எண் 27/2011.**

***2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் அறுபத்து இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

**1.** (1) இந்தச் சட்டம், 2011–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரி (நான்காம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். **குறுந்தலைப்பும் தொடக்கமும்.**

(2) இது மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**தமிழ்நாடு சட்டம் 32/2006.** **2.** 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தின் 3–ஆம் பிரிவின் 4–ஆம் உட்பிரிவின் (b) எனும் கூறில் "அத்தகைய வணிகர் ஐம்பது இலட்சம் ரூபாய் மற்றும் அதற்கு மேற்பட்ட தொகைக்கு செய்யப்பட்ட அவர்தம் அனைத்து விற்பனையின் மீதும் (2)–ஆம் உட்பிரிவின்படி வரி செலுத்தக் கடப்பாடுடையவராவார்" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, "அத்தகைய வணிகர் ஒவ்வோர் ஆண்டும் வரி செலுத்தத்தக்க பொருள்கள் தொடர்பான ஐம்பது இலட்சம் ரூபாய் வரையிலான தமது விற்பனைத் தொகையின் மீது அரசினால் அறிக்கை செய்யப்படக்கூடியவாறான நூற்றுக்கு ஒரு விழுக்காட்டுக்கு மேற்படாத அத்தகைய வீதத்தில் வரியைச் செலுத்தலாம்; மற்றும் வரி **3–ஆம் பிரிவிற்கான திருத்தம்.**

செலுத்தத்தக்க பொருள்களைப் பொறுத்த அளவிலான அவர்தம் ஐம்பது இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட அனைத்து விற்பனையின் மீதும் **(2)–**ஆம் உட்பிரிவின்படி வரி செலுத்தக் கடப்பாடுடையவராவார்'' எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்**.**

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.